04.07.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தோட்டக்கலைத்துறை விழிப்புணர்வு முகாம்

விழுப்புரம்:தோட்டக்கலைத் துறை மூலம் வழங்கப்படும் திட்டங்கள் குறித்து, விழுப்புணர்வு முகாம் கோலியனூரில் நடந்தது.கோலியனூர் ஒன்றிய விரிவாக்க மையத்தில் நடந்த முகாமிற்கு தோட்டக்கலை அலுவலர் முருகன் தலைமை தாங்கினார். தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் பழமரக் கன்றுகள் நடவு, மலர் சாகுபடி மற்றும் காய்கறி சாகுபடி ஆகியவற்றின் புதிய பரப்பளவு விரிவாக்கம் ஆகியவை குறித்து அவர் பேசினார்.மேலும் பசுமைக் குடில், நிழல்வலைக் குடில், தேனி வளர்ப்பு, தேசிய மூங்கில் இயக்கத்தின் கீழ் விவசாயிகளுக்கு முள்ளில்லா மூங்கில் கன்றுகள் வழங்கும் திட்டம் குறித்தும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து விவசாயிகளின் தேவைகள் குறித்து விண்ணப்பங்கள் பெற்று, முன்னுரிமைப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர்கள் பரமசிவம், சிவராமன், இளவரசி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பருவநிலை மாற்றத்திற்கு ஏற்றமீள் தன்மை வேளாண் திட்டம்

திண்டிவனம்: பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற மீள் தன்மையுள்ள வேளாண்மை திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்தது.தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையம்

இணைந்து, பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற மீள்தன்மையுள்ள வேளாண்மை திட்டங்களை 2010 ம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் வழி காட்டுதல்படி, செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாக, வேளாண் பொறியியல் துறையுடன் இணைந்து, இயற்கை வள மேம்பாட்டின் கீழ் சிறு பாசன ஏரி மற் றும் நீர் வரத்து வாய்க்கால் சீரமைக்கும் பணி, வறட்சி கிராமம் காட்டுசிவிறி தேர்வு செய்யப்பட்டுள்ளது.கடந்த ஏப்ரல் மாதம் துவங்கிய வரத்துவாய்க்கால் சீரமைப்பு, ஏரி தூர் வாருதல் மற்றும் அமிழ்வு நீர் குட்டை ஆகிய பணிகள் நிறைவடைந்துள்ளது. இதன்மூலம் பாசன கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்தது.இப்பணியின் செயல்பாடு குறித்து காட்டுசிவிறி மக்களுக்கான விளக்க நிகழ்ச்சி நடந்தது. திண்டிவனம் எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் வைத்தியநாதன் தலைமை தாங்கினார். பல்கலைக்கழக இயக்குனர் முனைவர் பிலீப் விளக்க உரையாற்றினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஷீபா வரவேற்றார். திண்டிவனம் கோட்ட வேளாண் பொறியியல் துறை சார்லஸ், முருகன், புண்ணியமூர்த்தி உள்ளிட்ட குழுவினர், திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய முனைவர்கள் கவிதா, சங்கீதா, ஜெயராமச்சந்திரன், மயிலம் ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் ராஜசேகரன், தோட்டக்கலை அலுவலர் வெங்கடேசன், ஊராட்சி துணைத் தலைவர் சீனிவாசன், முன்னோடி விவசாயி மணிவேலன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முனைவர் பாலுமகேந்திரன் நன்றி கூறினார்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தின்படி ரூ.12 லட்சம் கல்வி உதவித்தொகை

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை தாலுகாவில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்படி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் விழா நடந்தது.உளுந்தூர்பேட்டை தாலுகா எறையூர், எலவனாசூர்கோட்டை

ஆகிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களில் நடந்த நிகழ்ச் சியில் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது. எறையூர் குறுவட்டத்தில் 231 மாணவர்களுக்கும், எலவனாசூர்கோட்டை குறுவட்டத்தில் 140 மாணவர்களுக்கும் சமூக நல பாதுகாப்பு திட்ட தனி தாசில்தார் ராஜு, மொத்தம் 12 லட்சம் ரூபாய் கல்வி உதவி தொகையை வழங்கினார்.வருவாய் ஆய்வாளர்கள் உமாமகேஸ்வரி, சசிகலா, வி.ஏ.ஓ.,க்கள் அரசன், ஜெகன், மகேஸ்வரன், மகாலிங்கமூர்த்தி, கிராம உதவியாளர்கள் உடனிருந்தனர்.

## தோட்டக்கலைதிட்ட இயக்கம்

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம், மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்ட முகாம் நடந்தது. துணை இயக்குனர் ராமநாதன் உத்தரவின்படி 13 வட்டார அலுவலகங்களில் இந்த முகாம் நடந்தது. விவசாயிகளிடமிருந்து 1032 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

## மைசூரு வெங்காயம், மிளகாய் வந்ததால் ஒட்டன்சத்திரத்தில் விலை சறுக்கல்

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு மைசூரு பகுதியில் விளைந்த வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரிவடைந்துள்ளது.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகளில் விளைந்த வெங்காயம், மணப்பாறை பகுதியில் விளைந்த மிளகாய் இங்குள்ள மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்பட்டு மொத்தமாக விற்பனை செய்யப்படுகிறது. கடந்த சில நாட்களாக இவற்றின் வரத்து குறைவாக இருந்ததால், வெங்காயம் விலை கிடுகிடு வென அதிகரித்து கிலோ ரூ.60 வரை விற்றது. இதேபோல் பச்சை மிளகாய் கடந்த வாரம் கிலோ ரூ.40க்கு விற்றது. இதற்கு முன்பு இதன் விலை ரூ.30க்குள் இருந்தது.இந்நிலையில் மைசூரு பகுதியில்

வெங்காயம், மிளகாய் அறுவடை தொடங்கியதால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வரத்து அதிகரிக்க தொடங்கியது. இதனால் உயர்ந்திருந்த இவற்றின் விலை சரிவடையத் தொடங்கி உள்ளது. நேற்று ஒரு கிலோ வெங்காயம் ரூ.45க்கும், பச்சை மிளகாய் ரூ.25க்கும் விற்றது. வரத்து இன்னும் அதிகரிக்கும் என்பதால் விலை இன்னும் குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

### பால் உற்பத்தியாளர்களுக்கு "கிராப் கட்டர் மிஷின்'

பழநி:திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் பால்சேகரிப்பு குழுவை சேர்ந்த உறுப்பினர்களுக்கு 75 சதவீத மானிய விலையில் ""கிராப் கட்டிங்" இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளது. கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு கால்நடைகள் தீவனங்கள் மக்காசோளம், கரும்பு, பருத்தி உள்ளிட்டவற்றின் குச்சி, தட்டைகளை எளிதாக வெட்டுவதற்காக 75சதவீத மானிய விலையில் ""கிராப் கட்டர்" இயந்திரங்கள் வழங்கப்படஉள்ளன. முதற்கட்டமாக 15 கூட்டுறவு பால்உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காக 79 கிராப்ட் கட்டர் இயந்திரங்கள் பழநியிலுள்ள பால்சேகரிப்பு குழு அலுவலகத்திற்கு வந்துள்ளது. பால்உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" ரூ.19 ஆயிரத்து 150 மதிப்புள்ள கிராப்ட் கட்டர் இயந்திரம் வந்துள்ளது. சங்க உறுப்பினர்கள் 75 சதவீதம் மானியம் போக மீதி ரூ.4,787 செலுத்தினால் இயந்திரம் வழங்கப்படும். இது முன்பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விரைவில் வழங்கப்படும்,"என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் சரிவு**

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்வது குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து நொடிக்கு 10,743 கனஅடியாக சரிந்தது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவந்த மழையின் காரணமாக கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. அணைகளின் பாதுகாப்பு கருதி உபரிநீர் காவிரியில் திறக்கப்பட்டது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வந்தது. கடந்த ஒரு வாரத்தில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 8.16 அடி உயர்ந்தது. இந்த நிலையில், கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்து வருவதால், கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்பட்ட உபரிநீர் குறைக்கப்பட்டது. இதனால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாகக் குறைந்து, வெள்ளிக்கிழமை காலை நீர் வரத்து நொடிக்கு 10,743 கன அடியாக சரிந்தது. வெள்ளிக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 82.71 அடியாக இருந்தது.

அணையில் இருந்து குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 44.71 டி.எம்.சியாக இருந்தது.

**தேசிய நீர்ப்பாசனத் திட்டம்: ஃபிக்கி வரவேற்பு**



வேளாண் துறை மேம்பாட்டுக்கான தேசிய நீர்ப்பாசன திட்டம், செயல் திறன் மேம்பாடு தொடர்பாக மத்திய அமைச்சரவையின் முடிவுகளை இந்திய தொழிலக, வர்த்தக சபைகளின் சம்மேளனத்தின் (ஃபிக்கி) தலைவர் ஜோத்ஸ்னா சூரி வரவேற்றுள்ளார்.

புது தில்லியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: ரூ.50,000 கோடி மதிப்பிலான புதிய தேசிய நீர்ப்பாசன திட்டத்துக்கு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது. ஐந்து ஆண்டுக்கான இந்தத் தொகையில், நடப்பு நிதியாண்டில் ரூ. 5,300 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

விவசாயத்துக்கு பருவ மழையை மட்டும் நம்பியுள்ள நிலைமையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், விவசாயத்துக்குத் தேவையான தண்ணீர் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதை உறுதி செய்யவும் தண்ணீரை வீணடிக்காமல் திறம்படக் கையாள்வதை ஊக்குவிக்கவும் இயலும்.

இணையவழி தேசிய வேளாண் பொருள்கள் விற்பனை சந்தைத் திட்டத்துக்கு, அடுத்த 3 ஆண்டுகளுக்கு ரூ. 200 கோடி ஒதுக்கீடு செய்யவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த திட்டத்தின்

மூலம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 585 மொத்தவிலை வேளாண் சந்தைகள் ஒருங்கிணைக்கப்படும். இணையதளம் வழியாக, தேசிய அளவில் சந்தைகளை இணைப்பது, வேளாண் பொருள்களின் விலைகளில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துவதோடு, விவசாயிகளுக்கு சிறந்த பலனையும் இந்தத் திட்டங்கள் அளிக்கும் என்று ஃபிக்கி தலைவர் ஜோத்ஸ்னா சூரி கூறினார்.

**தென்னையில் நுண்ணூட்டச் சத்து குறைபாடு திருவட்டாறு வட்டார விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

திருவட்டாறு வட்டாரத்தில் தென்னையில் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டைப் போக்கி விவசாயிகள் அதிக மகசூல் பெற திருவட்டாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பி. சுசிலா அறிவுரை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருவட்டாறு வட்டாரத்தில் தென்னையில் நுண்ணூட்டச் சத்து குறைபாடு காணபடுகிறது, இதனால் விவசாயிகளுக்கு பெரும் மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

இப்பிரச்னைக்கு தீர்வு காண ஐந்தாம் ஆண்டு முதல் தென்னை மரங்களுக்கு 50 கிலோ தொழு உரம் இட வேண்டும். மேலும், தென்னையின் அடியிலிருந்து 5 அடி தொலைவுக்கு பாத்தி அமைத்து

யூரியா -1.3 கிலோ, சூப்பர்பாஸ்பேட்-2 கிலோ, பொட்டாஷ்-2 கிலோ என்ற கணக்கில் உரம் இட்டு நீரைப் பாய்ச்ச வேண்டும்.

தென்னையில் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டினால் பூ, குறும்பை உதிர்வு, புதிய பாளைகள் உருவாகாமை, தேரைக்காய், ஒல்லிக்காய் போன்ற குறைபாடுகள் ஏற்படுகின்றன.

பென்சில் முனை குறைபாடு:நுண்ணூட்டச் சத்து குறைபாட்டின் காரணமாக நுனிப் பகுதி சூம்பிப் போய் இலைகளின் எண்ணிக்கையும் குறைந்து காணப்படும். இலையின் அளவும் பெருமளவில் குறைந்து இலைகள் வெளுத்த மஞ்சள் நிறத்தில் காணப்படும். ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் இக்குறைபாட்டை சரி செய்துவிடலாம்.

குரும்பை உதிர்தல்:குரும்பை மற்றும் இளங்காய்கள் உதிர்வதற்கு நுண்ணூட்ட சத்து குறைபாடு ஒரு காரணமாகும். இதனால் தென்னையில் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதனை தடுக்க தென்னை நுண்ணூட்ட உரக் கலவையை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

தென்னை நுண்ணூட்ட உரக் கலவையை ஒரு மரத்துக்கு ஒரு கிலோ (ஒரு பாக்கெட்) வீதம் மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து இட வேண்டும். மரத்தின் அடியிலிருந்து 5 அடி தொலைவுக்கு பாத்தி அமைத்து மண்ணை கொத்திவிட்டு, தென்னை நுண்ணூட்ட உரக் கலவையை பாத்தி முழுவதும் தூவி கிளறிவிட்டு நீர் பாய்ச்ச வேண்டும். தென்னை நுண்ணூட்ட உரத்தை தொழு உரத்துடன் கலந்தும் இடலாம்.

தென்னை நுண்ணூட்ட உரம், திருவட்டாறு வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு உள்ளது. இதன் விலை (ஒரு கிலோ) ரூ.53 ஆகும்.

இதை வாங்கி விவசாயிகள் பயனடைய வேண்டும் என்றார் அவர்.

**சின்னவெங்காயம், இஞ்சி விலை உயர்வு**

சின்னவெங்காயம், இஞ்சி விலை தொடர்ந்து உயர்ந்துள்ளதால் பெண்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

இந்தியாவில் விளைவிக்கப்படும் காய்கனி வகைகளில் சின்னவெங்காயம், பல்லாரி, இஞ்சியின் தேவை மிகவும் அதிகமாகும். அதேபோல் வட இந்திய, தென்இந்திய என அனைத்துவித இந்திய

உணவு வகைகளிலும் வெங்காயத்தின் பயன்பாடு மிகவும் அதிகமாக உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம், தென்காசி சுற்றுவட்டார பகுதிகளில் விளைவிக்கப்படும் சின்ன வெங்காயம் கேரளத்துக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படும். அதில் குறிப்பிட்ட அளவு உள்ளூர் தேவைக்கு விநியோகிக்கப்படும். நிகழாண்டில் அக்னி நட்சத்திர காலத்தில் பெய்த மழையின் காரணமாக வெங்காய சாகுபடி பாதிக்கப்பட்டது. பல ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வெங்காயம் அழுகியது. இதனால் கடந்த 2 வாரங்களாக சின்ன வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கிலோ ரூ.60 முதல் 70 வரை விற்பனையாகிவருகிறது. வெள்ளிக்கிழமை ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.55-க்கு விற்பனையானது. இஞ்சியின் விலையும் உயர்ந்துள்ளது. ஒரு கிலோ இஞ்சி ரூ.100-க்கு விற்பனையாகிறது.

பல்லாரி விலை பரவாயில்லை :மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள புணே மற்றும் சோலாப்பூர், கர்நாடக மாநிலத்தில் உள்ள பெங்களூரு ஆகியவைதான் பல்லாரிக்கான தேசியச் சந்தைகளாகும். இந்த ஆண்டில் கர்நாடக மாநிலத்தில் பல்லாரி விளைச்சல் கடந்த ஆண்டைவிட மிகவும் அதிகமாக உள்ளது.

இதனால் பெங்களூருவில் இருந்து பல்லாரி வரத்து திருநெல்வேலி உள்பட தமிழகத்தின் தென்மாவட்ட சந்தைகளுக்கு அதிகரித்துள்ளது. இதனால் திருநெல்வேலியில் ஒரு கிலோ பல்லாரி ரூ.30-க்கு விற்கப்படுகிறது. 2012 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் ஒரு கிலோ பல்லாரி ரூ.95-ஐ தொட்டது குறிப்பிடத்தக்கது.

மேலப்பாளையத்தில் உள்ள உழவர்சந்தையில் காய்கனிகளின் விலைநிலவரம்:

(ஒரு கிலோவுக்கு):கத்தரி-ரூ.16, வெண்டைக்காய்-12, தக்காளி-24, அவரைக்காய்-44, புடலங்காய்-18, பாகற்காய்-16, பீர்க்கங்காய்-12, சுரைக்காய்-12, தடியங்காய்-12, பூசணிக்காய்-10, மாங்காய்-18, மிளகாய்-25, முள்ளங்கி-15, இஞ்சி-100, உருளைக்கிழங்கு-16, கேரட்-34, பீட்ரூட்-26, முட்டைகோஸ்-26, சவ்சவ்-16, ரிங்பீன்ஸ்-28, காலிபிளவர்-50.

**சிறுதானிய உணவுப் பொருள்களுக்கு விற்பனை சந்தை உருவாக்கப்படும்: ஆட்சியர்**

சிறுதானியங்கள் மூலம் தயாரிக்கப்படும் மதிப்புக் கூட்டுப்பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும் என்றார் ஆட்சியர் சு. கணேஷ்.

புதுக்கோட்டையில் இயற்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவனத்தின் இயக்குநரும், இந்திய விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாருமான ஜி. எஸ். தனபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற ஆட்சியர் மேலும் பேசியது:

இந்தக் கம்பெனியானது, சிறுதானியங்களிலிருந்து பல்வேறு வகையான மதிப்புக்கூட்டுப் பொருட்களை தயாரிக்க வேண்டும். அவ்வாறு உற்பத்தியாகும் பொருள்களின் விற்பனை செய்ய சந்தை வாய்ப்புகளை அரசுத் துறைகள் மூலமாகவும், மாவட்ட நிர்வாகத்தின் மூலமாகவும் உருவாக்கிக் கொடுக்கப்படும் என்றார். இயற்கை விவசாயியும், இயற்கை மருத்துவருமான தஞ்சை கோ. சித்தர் பேசுகையில், நோயற்ற வாழ்வுக்கு இயற்கை உணவே மருந்தாக அமையும். மக்கள் அரிசி, சிறுதானியம் போன்றவற்றை தீட்டாமல் சாப்பிட பழக வேண்டும் என்றார்.

கம்பெனியின் உருவாக்கம் மற்றும் நோக்கம் குறித்து நிர்வாக இயக்குநர் ஆதப்பன் விளக்கினார். இதில், வம்பன் தேசிய பயறு வகை ஆராய்ச்சி மைய தலைவர்,பேராசிரியர் சி.பி. ஞானமலர், நபார்டு மாவட்ட வளர்ச்சி

அதிகாரி எஸ். சோமசுந்தரம்,தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் குருமணி நிறுவன இயக்குநர் சி. அப்பாவு பாலாண்டார் ஆகியோர் வாழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் 400-க்கும் அதிகமான விவசாயிகள், புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு ஒன்றியங்களிலிருந்து கலந்து கொண்டவர்களுக்கு சிறுதானிய உணவுகள் வழங்கப்பட்டன.

முன்னதாக,சிறுதானிய மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களான வரகு, குதிரைவாலி, சாமை, கேழ்வரகு, நாட்டுக்கம்பு, சிறுதானிய சத்து மாவு, புட்டு மாவு, கேழ்வரகு மாவு, வரகு அவல், கம்பு அவல், கேழ்வரகு அவல், கறுப்புக்கொள்ளு போன்றவற்றின் கண்காட்சியும், விற்பனையும் நடைபெற்றது.

**"பயிர்க் கடன் முகாமில் ரூ.1.41 கோடி கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளனர்'**

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் முகாமில் 260 விவசாயிகள் ரூ. 1.41 கோடி பயிர்க் கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளனர் என்றார் மாவட்ட ஆட்சியர் (பொ) ச. மீனாட்சி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் பயிர்க் கடன் வழங்குவதற்கான சிறப்பு முகாம் ஜூலை 1 முதல் வருவாய் கிராமங்கள் வாரியாக, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. அதன்படி, 1-ம் தேதி எசனை, அலங்கிழி, குரும்பலூர் (தெ), நன்னை (கி), சு. ஆடுதுறை, ஓலைப்பாடி (கி), மேலமாத்தூர், நாரணமங்கலம், வரகுபாடி, உடும்பியம், வாலிகண்டாபுரம், நூத்தப்பூர் (வ) ஆகிய கிராமங்களில் நடைபெற்ற பயிர்க் கடன் முகாமில் 128 விவசாயிகள் ரூ. 67.04 லட்சத்துக்கும், 2-ம் தேதி கீழக்கரை, குரும்பலூர் (வ), நன்னை (மே),

பென்னகோணம் (வ), ஓலைப்பாடி (மே), அழகிரிபாளையம், நாட்டார்மங்கலம், காரை (கி), பூலாம்பாடி (கி), நூத்தப்பூர் (தெ), பிரம்மதேசம் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற பயிர்க் கடன் முகாமில் 132 விவசாயிகள் ரூ. 74.46 லட்சத்துக்கும் என மொத்தம் 260 பேர் ரூ. 1.41 கோடிக்கு பயிர்க் கடனுக்காக விண்ணப்பித்துள்ளனர் என்றார்.

**வேடகட்டமடுவு ஊராட்சியில் நீர்ப்பாசன மேலாண்மை ஆய்வு**

வேடகட்டமடுவு ஊராட்சியில் நீர்பாசன மேலாண்மை குறித்து எம்எல்ஏ டில்லிபாபுவுடன் பொதுப் பணித் துறை அதிகாரிகள் புதன்கிழமை கள ஆய்வு மேற்கொண்டனர்.

அரூர் வட்டம், வேடகட்டமடுவு ஊராட்சியில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் உழவுப் பணிகள் மேற்கொள்வதற்கு வசதியாக ஊத்தங்கரை வட்டம், பாம்பாறு நீர்த்தேக்கத்திலிருந்து 14 கி.மீட்டர் தொலைவுக்கு கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்தக் கால்வாயில் நீர்வரத்து இல்லாததால், வேடகட்டமடுவு, தாம்பல், டி.ஆண்டியூர், மேல்செங்கப்பாடி, மொண்டுகுழி பகுதிகளில் வேளாண் பணிக்கு நீர் ஆதாரங்களை ஏற்படுத்த வேண்டும் என எம்எல்ஏ பி.டில்லிபாபு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதையடுத்து, பொதுப் பணித் துறை (நீர்வள ஆதார அமைப்பு) நிர்வாகப் பொறியாளர் பாலசுப்பிரமணியம் தலைமையிலான அதிகாரிகள் எட்டிப்பட்டி தென்பெண்ணை ஆறு, பாம்பாறு பாசன கல்வாய் உள்ளிட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு கள ஆய்வு செய்தனர்.

அப்போது, வேடக்கட்டமடுவு ஊராட்சிக்குள்பட்ட கிராமப் பகுதிகளில் குடிநீர், பாசன வசதிகளை மேம்படுத்தவும், விவசாயிகளுக்குத் தேவையான நீர் ஆதாரங்களை அதிகரிக்கவும் திட்ட மதிப்பீடு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுப் பணித் துறை அதிகாரிகள் பொதுமக்களிடம் தெரிவித்தனர்.

ஆய்வின் போது, எம்எல்ஏ பி.டில்லிபாபு, ஊராட்சித் தலைவர் சரசு சிவமூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**தோட்டக்கலை துறை சார்பில் சிறப்பு முகாம்**

போளூரில் உள்ள தோட்டக் கலைத் துறை சார்பில், 2015-2016-ஆம் ஆண்டுக்கான பசுமைக் குடில், நிழல் வலை, கல் பந்தல்,சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு துறையின் மூலம் மானியம் பெற மனு பெறும் சிறப்பு முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் ஒன்றியத்தில் உள்ள ஏராளமான விவசாயிகள் மனு அளித்தனர். முகாமில் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் வடமலை நவீன சாகுபடி குறித்த கையேடுகளை வழங்கினார். இதில் உதவி வேளாண்மை அலுவலர்கள் அழகேசன், சுதாகர், வசந்தி, வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தோட்டக்கலைத் துறை திட்டம்: விவசாயிகளுக்கு விண்ணப்பம் வழங்கல்**

நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறை மற்றும் மலை பயிர்கள் துறை மூலம் 2015-2016-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கான விண்ணப்பங்கள் வழங்கும் நிகழ்ச்சி குன்னூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கேத்தி வேளாண்மை கிடங்கு, குன்னூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை, மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர். அர்ஜுனன், நீலகிரி மக்களவை உறுப்பினர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் மணி முன்னிலை வகித்தார்.

குன்னூர் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராம்சுந்தர் வரவேற்றார்.

இதில், ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், நுண்ணீர் பாசனம், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம், இந்திய ஜெர்மானிய சேமிப்புத் திட்டம், பெரு நகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட திட்டங்களில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.

இதில், குன்னூர் தாலுகாவிற்குள்பட்ட ஜெகதளா, இளித்தொரை, பர்லியாறு, தூதூர்மட்டம், மேலூர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சிவசுப்பிரமணியம், அலுவலர் பாலசங்கர் மற்றும் அலுவலக ஊழியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தோட்டக்கலைத் துறை மானியம்: விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்**

விவசாயிகள் மானியம் தொடர்பான விழிப்புணர்வு முகாம் திருப்பூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள தோட்டக்கலை துறை இணை இயக்குநர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமை தொடங்கி வைத்து ஆட்சியர் கு.கோவிந்தராஜ் பேசியது:

தோட்டக்கலைத் துறை மூலம் 2015-16-ஆம் ஆண்டுக்கு மானியங்கள் வழங்கப்படுவது குறித்தும், அதற்கான விண்ணப்பங்களை பெறும் வகையிலும் திருப்பூர், அவிநாசி, ஊத்துக்குளி, தாராபுரம், பொங்கலூர் ஆகிய 5 வட்டாரங்களில் இம்முகாம்கள் நடைபெறுகின்றன. இதைத்தொடர்ந்து மற்ற வட்டாரங்களிலும் இம்முகாம் நடைபெறவுள்ளது. முகாமில் தெரிவிக்கும் தகவல்களை விவசாயிகள்

முழுமையாக அறிந்து, அரசுத் திட்டங்களை முறையாகப் பயன்படுத்தி கொள்ளவேண்டும். மேலும், விவசாயிகள் தங்களது நிலங்களை மண் பரிசோதனை செய்து அதற்கேற்ற வகையில் பயிர் செய்ய வேண்டும். வேளாண்மை துறையில் புதிய தொழில்நுட்பங்களை அமல்படுத்த வேண்டும் என்றார்.மாவட்ட வருவாய் அலுவலர் பிரசன்ன ராமசாமி, கோட்டாட்சியர் முருகேசன், தோட்டக்கலை துணை இயக்குநர் சித்ராதேவி, வேளாண்மை துணை இயக்குநர் மகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சொட்டு நீர் பாசனத்திற்கு மானியம்**

தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் துறை மூலமாக அரசூர் பகுதி விவசாயிகளிடம் இருந்து சொட்டு நீர் பாசனத்திற்கு மானியம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

தமிழ்நாடு முழுவதும், சொட்டு நீர் பாசனத்தை ஊக்குவிக்கும் வகையில் அரசு சார்பில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ஐந்து ஏக்கர் நிலங்களுக்கும் குறைவாகன உள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 100 சதவீத மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

இதற்காக, அரசூரில் நடைபெற்ற சிறப்பு முகாமில் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வியாழக்கிழமை பெறப்பட்டன. இம்முகாமை அரசூர் ஊராட்சித் தலைவர் ஏ.வி.கோவிந்தராஜ் துவக்கிவைத்தார். ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் முத்துலிங்கம் முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத் துறை உதவி வேளாண்மை அலுவலர் நாச்சிமுத்து இத்திட்டம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். இதை விவசாயிகள் வரவேற்றுள்ளனர். நிலத்தடி நீர்மட்டம் இப்பகுதிகளில் 1000 அடிகளுக்கு கீழ் சென்றுவிட்ட நிலையில், மழைப் பொழிவும்

குறைவாக உள்ள சூழலில், சொட்டு நீர் பாசனம் அமைப்பதில் ஆர்வத்துடன் இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**கால்நடை வளர்ப்பு மேலாண்மைப் பயிற்சி**

வேளாண்துறையின் ஆத்மா திட்டத்தின் கீழ், காட்டேரிக்குப்பம் பண்ணைத்தகவல் மற்றும் ஆலோசனை மையம் சார்பில் கால்நடை மேலாண்மை பயிற்சி முகாம் சந்தை புதுக்குப்பம் கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஆத்மா திட்ட இயக்குநர் ரவிப்பிரகாசம் முன்னிலை வகித்துப் பேசினார். துணை இயக்குநர் முத்துக்கிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். வேளாண் அலுவலர் கலைச்செல்வன் ஆத்மா குழு அமைப்பதின் முக்கியத்துவம் பற்றி பேசினார். உதவி வேளாண் அலுவலர் கண்ணாயிரம் வரவேற்றார்.

கால்நடை மருத்துவர் செல்வராசு ஆடு, மாடுகளுக்கு ஏற்படும் நோய்கள், அதை சரிசெய்யும் வழிமுறைகள் மற்றும் கால்நடைத் துறையின் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். புதுவை காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் கால்நடை மருத்துவர் சித்தாரா ஆடு, மாடு, கோழிகளுக்கான உணவு அளிக்கும் முறைகள் மற்றும் நுண்ணூட்டத்தின் சிறப்பம்சங்கள் பற்றி விளக்கினார்.

மண்ணாடிப்பட்டு கிராமத்தை சேர்ந்த கால்நடை விவசாயி உதயமூர்த்தி, குறைந்த செலவில் கால்நடை வளர்ப்பது, அதன் மூலம் அதிக லாபம் ஈட்டுதல் பற்றியும் எடுத்துரைத்தார். சுத்துக்கேணி, லிங்காரெட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் குழு மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு கால்நடைகளுக்கான சத்துமாவு, குடல்புழு நீக்க மாத்திரை மற்றும் காயத்துக்கான மருந்துகள் வழங்கப்பட்டன.

உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜெயச்சந்திரன் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை காட்டேரிக்குப்பம் மற்றும் சுத்துக்கேணி உழவர் உதவியகத்தை சேர்ந்த கிராம விரிவாக்க பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் செய்திருந்தனர்.

**பயிர் விளைச்சல் மதிப்பீட்டு ஆய்வுக்கு பயிற்சி**

தேனி மாவட்டத்தில் வேளாண்மை பயிர் விளைச்சலை மதிப்பீடு செய்ய அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இது குறித்து மாவட்ட விவசாயத் துறை அலுவலர்கள் கூறியதாவது: மாவட்டத்தில் மானாவாரி மற்றும் நெல் சாகுபடியில் பயிர் விளைச்சல் மற்றும் மகசூலை மதிப்பீடு செய்ய வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, புள்ளியியல் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் மற்றும் முன்னோடி விவசாயிகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு ஊராட்சி ஒன்றியம் வாரியாக விவசாய நிலங்களில் பயிர் விளைச்சல், அறுவடையின் போது கிடைக்கும் மகசூல் ஆகியவற்றை ஆய்வு செய்து மதிப்பீடு செய்ய உள்ளனர். இந்த குழுவினருக்கு வேளாண்மைத் துறை சார்பில் 3 நாள்கள் பயிற்சி நடைபெற உள்ளது. தேனியில் ஜூலை 7ஆம் தேதி நடைபெறும் இந்த பயிற்சியை ஆட்சியர் ந.வெங்கடாசலம் தொடங்கி வைக்கிறார் என்றனர்.

**நெற்குப்பையில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி திட்டத்தில் விவசாயப் பயனாளிகள் தேர்வு**

சிவகங்கை மாவட்டம், நெற்குப்பை பேரூராட்சியில் தோட்டக்கலைத் துறை மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ், பயனாளிகள் தேர்வு முன்பதிவு வியாழக்கிழமை நடைபெற்றது.

திருப்பத்தூர் வட்டம், நெற்குப்பை பேரூராட்சியில் வட்டார அளவிலான தோட்டக்கலைப் பயிர் சாகுபடி விவசாயிகளுக்கான பயனாளிகள் தேர்வு முகாமை, பேரூராட்சித் தலைவர் சஞ்சீவி தலைமை வகித்து தொடக்கி வைத்தார். துணைத் தலைவர் பழனியப்பன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் கு. அழகுமலை கூறியது: மலைப் பயிர்கள் துறை மூலம் 2015-2016 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், தோட்டக்கலை பயிர் சாகுபடி பற்றிய அதிநவீன தொழில்நுட்பங்களைப் பற்றியதாகும்.

இத்திட்டத்தின் கீழ், மா அடர், சாதா நடவு, கொய்யா நடவு, மா சாதா நடவு, வீரிய ஒட்டுக் காய்கறிச் செடிகள் பெறவும், மண்புழு உரக்கூடம் தயாரித்தல், பறவைத் தடுப்பு வலை, களை தடுப்பு விரிப்பு பெறுதல் மற்றும் ஆர்.ஏ.டி.பி. திட்டத்தில் மா, காய்கறி நடவு, சிறு விவசாயிகள் நூறு சதவீத மானியத்திலும், பிற விவசாயிகள் 75 சதவீத மானியத்திலும் சொட்டு நீர்ப் பாசனம் பெறுவது குறித்தும், விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். இத்திட்டப் பயன்களைப் பெற, நெற்குப்பை, ஒழுகமங்கலம், தெக்கூர், துவார், மகிபாலன்பட்டி, கண்டவராயன்பட்டி, மருத்துவக்குடிப்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் ரேஷன் அட்டை, புகைப்படம் உள்ளிட்டவற்றைக் கொண்டுவந்து, தங்களுக்குத் தேவையான திட்டங்களைத் தேர்வு செய்து முன்பதிவு செய்தனர்.

**இஞ்சி, சின்னவெங்காயம் விலை உயர்வு**

ராஜபாளையம் வாரச்சந்தையில் கேரளா இஞ்சி கிலோ ரூ.120ஆக விலை உயர்ந்தது.

ராஜபாளையத்தில் வியாழக்கிழமை தோறும் வாரச்சந்தை நடைபெறும். கடந்த சிலவாரங்களாக இஞ்சி கிலோ ரூ.90 முதல் ரூ.100 வரை

இருந்தது. இந்த வாரம் ரூ.120 ஆக உயர்ந்துள்ளது. கடந்த இருமாதங்களுக்கு முன் கிலோ ரூ.40 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது. பொள்ளாச்சி பகுதியில் விளையும் இஞ்சி கிலோ ரூ.100க்கு விற்றது.

கோடை வெயிலால் விளைச்சல் குறைந்து கேரளா இஞ்சி விலை இருமடங்காக விலை உயர்ந்துள்ளதாகவும், தற்போது கேரளத்தில் மழை பெய்வதால் புது இஞ்சி வரத்து ஆகஸ்ட் மாதத்தில் அதிகரித்து விலை குறையும் எனவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதுபோல் தமிழகத்தில் சின்ன வெங்காய விளைச்சல் குறைந்துள்ளதா, நாடு மற்றும் ஒட்டு ரக சின்ன வெங்காயம் கிலோ ரூ.40 முதல் 45 விலையில் விற்றது.

**தோட்டக்கலை துறையில் பயனாளிகள் தேர்வு**

உசிலம்பட்டி அருகே செல்லம்பட்டி தோட்டக்கலைத் துறை அலுவலகத்தில் திட்ட பயனாளிகள் தேர்வு வியாழக்கிழமை நடைபெற்றது.

தோட்டக்கலைத் துறையின் 2015-16ஆம் ஆண்டுக்கான திட்ட பயனாளிகள் தேர்வு நடைபெற்றது. தோட்டக்கலை உதவி இயக்குநர் மு.பாண்டி, விவசாயிகளுக்கு திட்டங்கள் பற்றியும் மானியம் பற்றியும் விளக்கினார். இந்நிகழ்ச்சியில் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியக் குழு துணைத் தலைவர் ஜெயராமன், ஒன்றியக்குழு உறுப்பினர் போத்திராஜன், 62க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் பேபி ஷாலினி, சொர்ணராஜன், மாரிச்செல்வம் செய்திருந்தனர். தோட்டக்கலை அலுவலர் அ.மணிவேலு நன்றி கூறினார்.

தினகரன்

**மேட்டூருக்கு நீர்வரத்து சரிவு**

மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில், பருவ மழை பெய்து வருவதால், கர்நாடக மாநிலத்திலுள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. அணைகளின் பாதுகாப்பு கருதி, உபரி நீர் காவிரியாற்றில் திறக்கப்படுகிறது. இந்த தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. நேற்று முன்தினம் வினாடிக்கு 19,712 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 10,743 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர்வரத்து 10,500 கனஅடிக்கு மேல் உள்ளதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 81.87 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 82.71 அடியாக உயர்ந்தது. அணையில் நீர் இருப்பு 44.71 டி.எம்.சி. ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும் நீர்வரத்து சரிந்துள்ளது.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் சரிவு**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் சரிந்துள்ளது. ஒரு முட்டையின் விலை 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரபல பண்ணையாளர்கள், மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு விலை நிலவரம் குறித்து ஆலோசித்தனர். பின்னர்முட்டை விலையில் 20 காசு குறைக்கப்பட்டு ஒரு முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் விலை குறைந்துவருவதால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது. பண்ணையாளர்கள் 330 காசுக்கு குறைவாக முட்டையை விற்பனை செய்யவேண்டாம் என்.இ.சி.சி தலைவர் செல்வராஜ் தெரிவித்தார். நேற்று நடந்த ஆலோசனை கூட்டத்தில் முட்டைகோழி பண்ணையாளர் சம்மேளன துணைத்தலைவர் வாங்கிலி சுப்ரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர். சந்ைத நிலவரத்தை ஆய்வு செய்து விலையை நிர்ணயிக்கவேண்டும். பொதுமக்கள், பண்ணையாளர் நலன் பாதுகாக்கும் வகையில் விலை நிர்ணயம் இருக்கவேண்டும் என தெரிவித்தனர். மற்ற மண்டலங்களில் முட்டைவிலை விபரம்: (காசுகளில்): பெங்களூரு 350, மைசூர் 380, ஐதராபாத் 320, மும்பை 360, விஜயவாடா 330, கொல்கத்தா 360, டெல்லி 315 காசுகள்.

**கறிக்கோழி விலை தொடர்ந்து சரிவு**

கோவை, ஜூலை 3: கறிக்கோழி விலை ஒரு மாதமாக தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று தோல் நீக்கிய கறி ரூ.150க்கு சரிந்தது. கறிக்கோழி விலை கடந்த மாதம் 6ம் தேதி பண்ணை கொள்முதல் மொத்த விலை உயிருடன் கிலோ ரூ.105ஆக இருந்தது. பின்னர் 10ம் தேதி ரூ.96 ஆகவும், 11ம் தேதி ரூ.92, 12ம் தேதி ரூ.87, 28ம் தேதி 85 ஆகவும்

சரிந்தது. பின்னர் நேற்று (2ம் தேதி) கிலோவிற்கு மேலும் ரூ.4 குறைந்து 81 ஆனது. அதைத்தொடர்ந்து நேற்று சில்லரை விற்பனை நிலையங்களில் உயிருடன் கிலோ ரூ.96 ஆகவும், தோலுடன் கறி கிலோ ரூ.130 ஆகவும், தோல் நீக்கிய கறி கிலோ ரூ.150 ஆகவும் சரிந்தது. கறிக்கோழி விலை கடந்த ஒரு மாதமாக சரிந்து வந்துள்ளது.

**உழவர் தின பேரணி, கடன் நிவாரண மாநாடு ஈரோட்டில் வரும் 5ம் தேதி நடக்கிறது**

ஈரோடு, : தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் வெங்கடாசலம் ஈரோட்டில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகம் முழுவதும் மஞ்சள், கரும்பு பயிருக்கு கட்டுபடியான விலை கிடைக்காததால்விவசாயிகள் பெரும் அவதியடைந்து வருகின்றனர். கரும்புக்கு தமிழக அரசின் நிர்ணய விலையான டன் ஒன்றுக்கு ரூ. 2,550 வீதம் வழங்க வேண்டும் என்ற உத்தரவை தனியார் சர்க்கரை ஆலைகள் பின்பற்றுவதில்லை. சர்க்கரை ஆலைகள் இதுவரையிலும் விவசாயிகள் வழங்கிய கரும்புக்கு ரூ.1000 கோடி வரையிலும் பாக்கி வைத்துள்ளன. மஞ்சளுக்கு போதிய விலை நிர்ணயம் செய்யாததால் விவசாயிகள் பாதிப்படைகின்றனர். விவசாயிகள் தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்கடன், பொருளீட்டு கடன்,பத்திர ஈட்டு கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்.வங்கிகளில் இருந்து தங்க நகைகளுக்கு வழங்கி வந்த 3 % மானியத்தை தொடர்ந்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை மத்திய அரசுவாபஸ் பெற வேண்டும். தேங்காய் கொப்பரைக்கு கிலோ ரூ150 வீதம் அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

நெல் கொள்முதல் விலையை மத்திய, மாநில அரசுகளே கிலோவுக்கு ரூ.25 வீதம் அறிவிக்க வேண்டும். வாழை, நிலக்கடலை, பால் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். பயிர்களை சேதம் செய்யும் வனவிலங்ககுளை கட்டுப்படுத்தவும், பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உடனுக்குடன் நஷ்டஈடு வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் விவசாயிகளின் கோரிக்கை போராட்டத்தின் போது உயர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தவும், கடன் நிவாரணம் வழங்கவும் வரும் 5ம் தேதி ஈரோட்டில் மாலை 4 மணியளவில் மாநில அளவில் விவசாயிகள் பங்கேற்கும் உழவர் தின பேரணி மற்றும் மாநாடு நடைபெற உள்ளது.ஈரோடு சூளை ரிலையன்ஸ் பெட்ரோல் வங்கியில் இருந்து விவசாயிகள் பேரணியாக புறப்பட்டு சத்தி ரோடு வழியாக செல்லாயம்மாள் மகாலில் முடிவடையும். இதைதொடர்ந்து செல்லயாயம்மாள் மகாலில் விவசாயிகள் மாநாடு நடைபெறும் மாநாட்டில் மத்திய, மாநில அரசுகளிடம் விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். இவ்வாறு வெங்கடாசலம் தெரிவித்தார். பேட்டியின் போது மாவட்ட செயலாளர் செங்கோட்டையன் உடன் இருந்தார்.

**ரூ. 1.41 கோடி கடன் கேட்டு 260 விவசாயிகள் விண்ணப்பம்**

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற இரண்டு நாள் நடைபெற்ற பயிர்க்கடன் முகாம்களில், 260 விவசாயிகள் ரூ. 1.41 ோகாடி கடன் கேட்டு விண்ணப்பித்ததுள்ளனர்.தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் பயிர் கடன் பெற சிறப்பு முகாம் ஜூலை 1ம் தேதி முதல் வருவாய் கிராமங்கள் வார்யாக சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகார் அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி 1ம்தேதி பெரம்பலூர் தாலுகாவில் எசனை, அலங்கிழி, குரும்பலூர் (தெ)கிராமங்களிலும், குன்னம் வட்டத்தில் நன்னை(கி), சு.ஆடுதுறை,

ஓலைப்பாடி(கி) கிராமங்களிலும், ஆலத்தூர் தாலுகாவில் மேலமாத்தூர், நாரணமங்கலம், வரகுபாடி கிராமங்களிலும், வேப்பந்தட்டை தாலுகாவில் உடும்பியம், வாலிகண்டாபுரம், நூத்தப்பூர்(வ) கிராமங்களில் நடைபெற்றது. இதில் 128 விவசாயிகள் ரூ. 67.04 லட்சத்திற்கு கடன்கேட்டு விண்ணபித்திருந்தனர்.

நேற்று பெரம்பலூர் தாலுகாவில் கீழக்கரை, குரும்பலூர்(வ) கிராமங்களிலும், குன்னம் தாலுகாவில் நன்னை (மே), பென்னகோணம் (வ), ஓலைப்பாடி (மே) கிராமங்களிலும், ஆலத்தூர் தாலுகாவில் அழகிர்பாளையம், நாட்டார் மங்கலம், காரை (கி) கிராமங்களிலும், வேப்பந்தட்டை தாலுகாவில் பூலாம்பாடி (கி), நூத்தப்பூ ர் (தெ), பிரம்மதேசம் கிராமங்களிலும் நடைபெற்றது. இதில் 132 விவசாயிகள் ரூ. 74.46 லட்சத்திற்கும் பயிர்க்கடன் கேட்டிருந்தனர்.இதன்படி 2 நாள் நடந்த முகாமில் 260 விவசாயிகள் ரூ. 1 கோடியே 41 லட்சத்து 50 ஆயிரத்துக்கு பயிர்க் கடனுக்காக விண்ணப்பித்துள்ளனர். இன்று (3ம் தேதி) பெரம்பலூர் தாலுகாவில் சத்திரமனை, அயிலூர் கிராமங்களிலும், குன்னம் தாலுகாவில் பெருமத்தூர் (வ), பென்னகோணம்(தெ), பரவாய்(மே) கிராமங்களிலும், ஆலத்தூர் தாலுகாவில் தொண்டபாடி, செ.மா விலங்கை, காரை(மே) கிராமங்களிலும், வேப்பந்தட்டை தாலுகாவில் பூலாம்பாடி (மே), பசும்பலூர் (வ), அனுக்கூர் கிராமங்களிலும் முகாம் நடக்கிறது.

20152016ம் ஆண்டில் அங்கீகர்க்கப்பட்ட பயிர் வார்யான கடன் அளவு அடிப்படையிலேயே பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. இதுவரை பயிர்க்கடன் பெறாத விவசாயிகளுக்கு முன்னுர்மை அளிக்கப்படும். இதற்கு முன்பு பயிர்க்கடன் பெற்றிருந்தால், அக் கடனை உர்யகாலத்தில் திருப்பி செலுத்தியிருக்க வேண்டும். இந்த முகாம்களில் தகுதியுள்ள பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## குறுவை தொகுப்பு உதவி திட்டத்தில் ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம்

தஞ்சை, : குறுவை தொகுப்பு உதவி திட்டத்தில் ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தஞ்சை நாஞ்சிக்கோட்டை சாலை உழவர் மையத்தில் தோட்ட கலைத்துறை திட்டங்களுக்கான மனுக்கள் பெறும் சிறப்பு முகாம் நடந்தது. முகாமை துவக்கி வைத்து கலெக்டர் சுப்பையன் பேசியதாவது: தஞ்சை மாவட்ட தோட்ட கலைத்துறையின் மூலம் 2015-16ம் ஆண்டில் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய மருத்துவ பயிர்கள் இயக்கம், தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கம் (நுண்ணீர் பாசனம்) மற்றும் தேசிய மூங்கில் இயக்கம் ஆகிய திட்டங்களுக்கு இலக்கு பெற்று பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். முரு ங்கை சாகுபடியை அதிகரித்து முருங்கை பொடியை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பூக்கள், பழங்கள், இதர தோட்டக்கலை பயிர்கள் அதிகளவில் பயிரிட்டு லாபம் அடையலாம். தோட்டக்கலை பயிர்கள் அதிக பயிரிடும் இடங்களை கண்டறிந்து அப்பகுதி விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்களை வழங்க வேண்டும். விவசாயிகள் பயன்பெற வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரக அலுவலர்களை அணுகலாம்.குறுவை சாகுபடி செய்யும் களர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு தங்கள் உற்பத்தியை பெருக்கி கொள்ள ஏதுவாக ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் வழங்கப்படுகிறது. களர் நிலமுள்ள விவசாயிகள் தங்கள் வயலில் கடைசி உழவுக்கு முன்பாக ஒரு ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சத்தை இட்டு உழுது பின்னர் நடவு பணி மேற்கொள்ள வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி செய்யும் களர் நிலம் உள்ள விவசாயிகள் அனைவரும் தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலரை பயன்பெறலாம் என்றார்.முகாமில் 10 பெண் விவசாயிகள்

உட்பட 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று தங்களுக்கு தேவைப்படும் மானிய விவரங்கள் கோரி மனு அளித்தனர். முகாமில் வேளாண் இணை இயக்குனர் சேகர், துணை இயக்குனர் பாலகிருஷ்ணன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் சொக்கலிங்கம் (வேளாண்மை), துணை இயக்குனர் கலியராஜ் (வேளாண் விற்பனை), வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் வெங்கட்ராமன், தோட்டக்கலை உதவி அலுவலர் வெங்கட்ராமன் கலந்து கொண்டனர்.மண்

**வளம் பெருக பசுந்தாள் உர பயிர் சாகுபடி**

சேதுபாவாசத்திரம், : மண் வளம் பெருகி மகத்தான மகசூல் பெற பசுந்தாள் உர பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: மகத்தான மகசூல் பெறவேண்டுமென்றால் அதிகளவு இயற்கை உரங்களை மண்ணில் இடவேண்டும். இதில் முக்கிய பங்கு வகிப்பது பசுந்தாள் உரங்கள் மற்றும் பசுந்தழை உரங்களாகும். ரசாயன உரச்செலவை குறைக்க சாகுபடி நிலப்பரப்பில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம். பசுந்தாள் உரத்தில் தக்கை பூண்டு, சணப்பு, கொளிஞ்சி, அகத்தி, சீமை அகத்தி, பிள்ளிபயிர் சிறந்தவையாகும். பசுந்தாள் உரப்பயிர்களால் பயிர்வகை இனத்தை சேர்ந்த பசுந்தாளுர பயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து 70 சதவீதம் வரை வேர்முடிச்சுகளில் நிலைநிறுத்தி அதில் ஒரு பகுதியை மண்ணில் சேர்ப்பதால் நிலம் வளமடைகிறது. ஒரு ஏக்கரில் 25 முதல் 45 கிலோ வரை தழைசத்தை மண்ணுக்கு கொடுக்கிறது. மண் அமைப்பை சீராக்குகிறது. மண் அரிப்பை தடுத்து மேல் மண் இழப்பை தடுக்கிறது.

மண்ணுக்கு வளம் சேர்ப்பது மட்டுமல்லாமல் பிடிப்பு பயிராகவும், நிழற்பயிராகவும், மூடுபயிராகவும், தீவன பயிராகவும் பயன்படுகிறது. மண்ணின் கரிமபொருட்களை (ஆர்கானிக் மேட்டர்) அதிகரிக்க செய்கிறது. பசுந்தாள் எருவானது பயிரின் பேரூட்ட சத்தான தழைச்சத்து மண்ணிலிருந்து நீர் மூலம் விரயமாவதை தடுத்து நிறுத்த உதவுகிறது. நுண்ணூட்ட சத்துக்களை உறிஞ்சி தன்னுடன் வைத்து கொண்டு பிறகு மண்ணில் உள்ள பயிருக்கு தேவைப்படும்போது எளிதில் கிடைக்க செய்கிறது. பசுந்தாளூர பயிர்கள் நிலத்தில் சேரும்போது அங்குள்ள நுண்ணுயிர்கள் விரைவாக பெருகி செயல்திறன் ஊக்குவிக்கப்படுகிறது. எனவே அனைத்து விவசாயிகளும் பசுந்தாளூர பயிர்களை பயிரிட்டு பூக்கும் தருணத்தில் மடக்கி உழுது மண்வளம் பெருகி உள்ள நிலத்தில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம். பசுந்தாள் உரப்பயிர் விதைகள் தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

தி இந்து

தமிழால் இணைவோம்

**ரூ.33,441 கோடிக்கு கடல் உணவு ஏற்றுமதி: தூத்துக்குடியில் உயர்வு**

நாட்டின் கடல் உணவு ஏற்றுமதி கடந்த ஆண்டு 10 சதவீதம் உயர்ந் துள்ளது. 2014-2015ம் நிதியாண் டில் இந்தியாவில் இருந்து மொத் தம் ரூ.33,441.61 கோடி மதிப்பிலான 10,51,243 டன் கடல் உணவு பொருள் கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இந்திய கடல் உணவு ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தின் தூத்துக்குடி மண்டல அலுவலகம் சார்பில் 2014-15-ம் ஆண்டில் ஏற்றுமதியான கடல் உணவு பொருள்கள் குறித்த விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**10 சதவீதம் வளர்ச்சி:** 2014-15ம் ஆண்டு இந்தியாவில் இருந்து 10,51,243 டன் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட் டுள்ளன. இதன் மதிப்பு 551.11 கோடி டாலராகும். ரூபாய் மதிப் பில் ரூ. 33,441.61 கோடியாகும். இது கடந்த 2013-14-ம் ஆண்டை விட அளவில் 6.86 சதவீதமும், ரூபாய் மதிப்பில் 10.69 சதவீதம் அதிகமாகும். 2013-14ல் ரூ.30,213.26 கோடி மதிப்புள்ள 9,83,756 டன் கடல் உணவு பொருட் கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள முக்கிய கடல் உணவு பொருள் பதப்படுத்தப்பட்ட இறால் ஆகும். 2014-15ம் ஆண்டில் 3,57,505 டன் பதப்படுத்தப்பட்ட இறால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்திய ரூபாயில் இதன் மதிப்பு ரூ. 22,468.12 கோடியாகும்.

இறாலுக்கு அடுத்தபடியாக ரூ. 3778. 50 கோடி மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட மீன் 3,09,434 டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை சென்னை துறைமுகம் வழியாக ரூ.2,458. 20 கோடி மதிப்பிலான 46,671 டன் கடல் உணவு பொருட் கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அளவில் 15.58 சதவீதம், ரூபாய் மதிப்பில் 9.29 சதவீதமும் குறைவாகும்.

**தூத்துக்குடியில் உயர்வு**

தூத்துக்குடி துறைமுகம் வழியாக 2014-15ல் ரூ. 2,328.27 கோடி மதிப்பிலான 42,203 டன் கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டை விட அளவில் 6.72 சதவீதமும், ரூபாய் மதிப்பில் 7.63 சதவீதமும், டாலர் மதிப்பில் 7.06 சதவீதமும் அதிகமாகும் என, கடல் உணவு ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் தெரிவித்துள்ளது._

## குற்றாலத்தில் படகு சவாரி தொடங்கியது



தென்காசி, குற்றாலம் படகு குழாமில் இந்த ஆண்டுக்கான படகு சவாரியை, கலெக்டர் மு.கருணாகரன் தொடங்கி வைத்தார்.படகு சவாரி நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் தற்போது சீசன் காலம் ஆகும். அங்குள்ள அனைத்து அருவிகளிலும் தண்ணீர் விழுகிறது. சீசன் காலத்தில் ஆண்டுதோறும் குற்றாலத்துக்கு ஏராளமான சுற்றலா பயணிகள் வருகிறார்கள். குற்றாலத்தில் இருந்து ஐந்தருவி செல்லும் வழியில் படகு குழாமில் உள்ளது. அங்கு சீசன் காலத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் சார்பில் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் விதமாக படகு சவாரி நடத்தப்படுகிறது. தற்போது படகு குழாமில் தண்ணீர் நிரம்பிவிட்டது. எனவே இந்த ஆண்டுக்கான படகு சவாரியை தொடங்க ஏற்பாடுகள் நடந்து வந்தன.கலெக்டர் தொடங்கி வைத்தார் நேற்று காலையில் படகு சவாரி தொடக்க விழா நடந்தது. மாவட்ட கலெக்டர் மு.கருணாகரன், படகு சவாரியை தொடங்கி வைத்தார். தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் ஆர்.முருகையாபாண்டியன், பி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த படகு குழாமில் 4 இருக்கைகள் மற்றும் 2 இருக்கைகள் கொண்ட பெடல் படகுகளும், துடுப்பு படகுகளும் உள்ளன. ஒருவர் மட்டும் செல்லும் கயாக் வகை துடுப்பு படகுகளும் உள்ளன. நேற்று முதல்நாள் என்பதால் படகு சவாரி செய்ய சுற்றுலா பயணிகளின் கூட்டம் குறைவாகவே இருந்தது.தொடக்க விழாவில், படகு குழாம் அலுவலர்கள் அசோகன், கருப்பையா, குற்றாலம் நகர பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி இளங்கோ, துணைத்தலைவர் கணேஷ் தாமோதரன், தென்காசி நகரசபை தலைவி பானுஷமீம், மேலகரம் நகர பஞ்சாயத்து தலைவர் பாலசுப்பிரமணியன், கீழப்பாவூர் யூனியன் தலைவர் செல்வ மோகன்தாஸ் பாண்டியன், ச.ம.க மாவட்ட செயலாளர் எஸ்.கே.டி.பி.அதியமான், மேலகரம் அ.தி.மு.க. செயலாளர் கார்த்திக்குமார், குற்றாலம் இளைஞர் பாசறை சுரேஷ், தென்காசி அ.தி.மு.க. நகர செயலாளர் முத்துக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நவீன கரும்பு சாகுபடி முறையை பின்பற்றுவதில் விவசாயிகள் ஆர்வம்**



மூங்கில்துறைப்பட்டு,

மூங்கில்துறைப்பட்டு பகுதியில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாயம்

மூங்கில்துறைப்பட்டை சுற்றிலும் உள்ள பொருவளூர், பொரசப்பட்டு, ஈருடையாம்பட்டு, அருளம்பாடி, வடபொன்பரப்பி, மேல் சிறுவள்ளூர், மைக்கேல்புரம், சவேரியார்பாளையம் ஆகிய பகுதிகளில் விவசாயம் தான் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆண்டு பயிரான கரும்பு சாகுபடியில் தான் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக, சொட்டுநீர் பாசன முறையை அதிகமான விவசாயிகள் கையாண்டு வருகின்றனர். அதன்படி, தற்போது நீடித்த நவீன கரும்பு சாகுபடி என்கிற முறையில் பயிர் செய்கின்றனர்.

அதிக வருவாய்

இதன் மூலமாக தண்ணீர் சிக்கனமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் தண்ணீர் வீணாகாமல் கரும்பு பயிர்களுக்கு மட்டுமே செல்வதால் நன்றாக வளர்ந்து வருகிறது. இதனால் களைகள் குறைவதுடன், மண் அதிகளவில் அணைக்க முடியும். எனவே கரும்புகளின் தண்டுகள் நன்றாக காணப்படுகிறது. இதனால் ஒரு ஏக்கருக்கு 80 முதல் 120 டன்கள் வரை கரும்பு அறுவடை செய்யலாம் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதன் மூலமாக அதிகளவில் வருமானம் கிடைக்க வாய்ப்புகள் இருக்கிறது.

**சென்னை கோயம்பேடு சந்தையில் ரூ.50 தான் சில்லறை கடைகளில் சாம்பார் வெங்காயம் கிலோ ரூ.100-க்கு விற்பனை**



சென்னை,

சென்னை கோயம்பேடு சந்தையில் ரூ.50-க்கு விற்பனையாகும் ஒரு கிலோ சாம்பார் வெங்காயம், சில்லறை கடைகளில் ரூ.100-க்கு விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். பீன்ஸ், அவரை, முருங்கை சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாகவே காய்கறிகள் விலையில் ஏற்ற இறக்கம் இருந்து வருகிறது. முக்கியமாக பீன்ஸ், அவரைக்காய், முருங்கைக்காய் போன்ற காய்கறிகளின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த மாத இறுதியில் ஒரு கிலோ பீன்ஸ் ரூ.40-க்கும், அவரைக்காய் ரூ.45-க்கும், முருங்கைக்காய் ரூ.50-க்கும் விற்பனை ஆனது. இந்தநிலையில் வரத்து குறைவால் இந்த காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. அதன்படி ஒரு கிலோ பீன்ஸ் ரூ.50-க்கும், அவரைக்காய் ரூ.50-க்கும், முருங்கைக்காய் ரூ.60-க்கும் நேற்று விற்பனை செய்யப்பட்டது. பொதுமக்கள் ஆர்வம்அதேநேரத்தில் சில காய்கறிகளின் விலை குறைந்து உள்ளது. கடந்த வாரத்தில் ரூ.25-க்கு விற்பனையான

ஒரு கிலோ பீட்ரூட் ரூ.20-க்கும், ரூ.25-க்கு விற்பனையான கொத்தவரங்காய் ரூ.20-க்கும், ரூ.20-க்கு விற்பனையான சுரைக்காய் ரூ.15-க்கும், ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கட்டு கொத்தமல்லி ரூ.15-க்கும், ரூ.6 வரை விற்பனையான வாழை இலை (ஒன்றுக்கு) ரூ.4-க்கும் கோயம்பேடு சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. உருளைக்கிழங்கு, மிளகாய், இஞ்சி, சேனைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, கத்தரிக்காய், வெண்டைக்காய், முள்ளங்கி, புடலங்காய் உள்ளிட்ட காய்கறிகளின் விலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இதனால் விலை குறைவான காய்கறிகளை நேற்று பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச்சென்றனர். விலை நிலவரம்சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:-
உருளைக்கிழங்கு - ரூ.18, பல்லாரி - ரூ.20 முதல் ரூ.25 வரை, பீன்ஸ் - ரூ.50, கேரட் - ரூ.35, நூக்கல் - ரூ.25, சவ்சவ் - ரூ.25, காலிபிளவர் - ரூ.30, பீட்ரூட் - ரூ.20, முட்டைக்கோஸ் - ரூ.15, மிளகாய் - ரூ.25, இஞ்சி புதியது - ரூ.45 முதல் ரூ.50 வரை, இஞ்சி பழையது - ரூ.90, சேனைக்கிழங்கு - ரூ.25, சேப்பக்கிழங்கு - ரூ.30, கத்தரிக்காய் - ரூ.15, வெண்டைக்காய் - ரூ.25, அவரைக்காய் - ரூ.50, கோவைக்காய் - ரூ.25, கொத்தவரங்காய் - ரூ.20, பாகற்காய் - ரூ.30, சின்ன பாகற்காய் - ரூ.50, முருங்கைக்காய் - ரூ.60, முள்ளங்கி - ரூ.15, தக்காளி - ரூ.20, சாம்பார் வெங்காயம் - ரூ.50, பச்சைப்பட்டாணி - ரூ.200, பீர்க்கங்காய் - ரூ.20, சுரைக்காய் - ரூ.15, புடலங்காய் - ரூ.20, தேங்காய் - ரூ.18, வாழைக்காய்(ஒன்று) - ரூ.5.கூடுதல் விலைக்கு விற்பனைகோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை குறைந்து காணப்பட்டாலும், சென்னையை சுற்றியுள்ள சில்லறை கடைகளில் காய்கறிகள் விலை அதிகம் உயர்ந்து இருக்கிறது. முக்கியமாக வெங்காயத்தின் விலை அதிகமாக உயர்ந்து இருப்பதாக பொதுமக்கள் புகார் கூறிவருகின்றனர். இதுகுறித்து பொதுமக்கள் சிலர் கூறுகையில், ‘‘பொதுவாகவே சில்லறை

காய்கறி கடைகளில் சிறிது கூடுதல் விலைக்குத்தான் காய்கறிகள் விற்பனை செய்யப்படும். ஆனால் சமீபகாலமாகவே இந்த கடைகளில் விலை மிகவும் அதிகமாக உள்ளது. குறிப்பாக சாம்பார் வெங்காயம் கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் அதே வெங்காயம் திருவான்மியூர், பெரம்பூர், புரசைவாக்கம், கொசப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் அமைந்த சில்லறை கடைகளில் ரூ.80 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்படுகிறது.10 சதவீத காய்கறிகள் சேதம்இதுகுறித்து சில சில்லறை வியாபாரிகள் கூறுகையில், ‘‘கோயம்பேடு சந்தையில் காய்கறிகளை வாங்கி சுத்தம் செய்தல், அதிக வெப்பம், போக்குவரத்தால் பாதிப்பு, வண்டிகளில் அடைக்கப்படும் போது ஏற்படும் சேதாரங்கள் உள்ளிட்ட காரணங்களால் 10 சதவீத காய்கறிகள் அழுகி கெட்டு விடுகின்றன. இதனை சமாளிக்கவே சில நேரங்களில் கூடுதல் விலைக்கு காய்கறிகளை விற்பனை செய்யவேண்டியதுள்ளது’’, என்றனர்.

**ரமலான் நோன்பு: சாத்துக்குடி, மாம்பழம், ஆரஞ்சு பழங்களின் விற்பனை அதிகரிப்பு**



கோயம்பேடு சந்தையில் பழங்களின் விற்பனையில் எந்தவித மாற்றமும் இல்லை. ஆனால் ரமலான் நோன்பு காலகட்டம் காரணமாக சாத்துக்குடி,

மாம்பழம், ஆரஞ்சு ஆகிய பழங்களின் விற்பனை அதிகரித்து உள்ளது. இதுகுறித்து சென்னை வியாபாரிகள் சங்கத்தலைவர் (மாம்பழம்) எஸ்.சீனிவாசன் கூறியதாவது:-ரமலான் நோன்பு காலத்தை முன்னிட்டு பழ வகைகள் விற்பனை அதிகரித்து இருக்கிறது. முக்கியமாக ஆரஞ்சு, மாம்பழம், சாத்துக்குடி, ஆப்பிள் உள்ளிட்ட பழ வகைகள் நன்றாக விற்பனை ஆகிறது. எனவே கூடுதல் வண்டிகள் மூலம் இந்த பழங்கள் அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. தற்போது, ஒரு கிலோ சாத்துக்குடி (பழையது) ரூ.45 முதல் ரூ.52 வரையும், புதிய சாத்துக்குடி ரூ.22 முதல் ரூ.35 வரையும், ஒரு கிலோ அன்னாசிபழம் ரூ.35 முதல் ரூ.40 வரைக்கும், ஒரு கிலோ கருப்பு திராட்சை ரூ.70-க்கும், மாதுளம்பழம் (10 கிலோ) ரூ.800 முதல் ரூ.1,300 வரையிலும், ஒரு கிலோ பப்பாளி ரூ.18 முதல் ரூ.20 வரையிலும், சப்போட்டா ரூ.20 முதல் ரூ.40 வரையிலும், கொய்யாப்பழம் ரூ.25 முதல் ரூ.40 வரையிலும், அத்திப்பழம் ரூ.70-க்கும், ஸ்ட்ராபெர்ரி (2 கிலோ பெட்டி) ரூ.650-க்கும், ஆரஞ்சு (15 கிலோ) ரூ.1,000 முதல் ரூ.1,100 வரையிலும், ஒரு கிலோ ஆப்பிள் ரூ.130 முதல் ரூ.180 வரையிலும், மாம்பழம் ரூ.60 முதல் ரூ.80 வரையிலும், தர்பூசணி ரூ.15 முதல் ரூ.20 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**சம்பா சாகுபடி பணிகள் தொடக்கம்: பாசன வாய்க்கால்களை தூர்வார வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**



காட்டுமன்னார்கோவில்,

குமராட்சி பகுதியில் சம்பா நெல் சாகுபடி பணிகள் தொடங்கியுள்ளதால், பாசன வாய்க்கால்களை விரைந்து தூர்வார விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

44 ஆயிரம் ஏக்கர்

கர்நாடக பகுதியில் தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. இதனால் மேட்டூர் ஆணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக லால்பேட்டை வீராணம் ஏரி விரைவில் திறக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதையடுத்து வீராணம் ஏரி நீரை நம்பி விவசாயம் செய்து வரும் குமராட்சி பகுதி விவசாயிகள் தற்போது நடப்பாண்டில் சம்பா சாகுபடி செய்வதற்கான முதல் கட்டப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதன்படி தங்களது நிலங்களை டிராக்டர் மூலம் உழுது தயார் செய்து வருகின்றனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில்– ஒவ்வொரு ஆண்டும் குமராட்சி பகுதியில் விவசாயிகளான நாங்கள் சுமார் 44 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் சம்பா நெற்பயிரினை சாகுபடி செய்து வருகின்றோம். அதன் படி இந்தாண்டும் செய்வதற்காக நிலங்களை உழுது வருகின்றோம். மேலும் விரைவில் தென்மேற்கு பருவ மழை பெய்யும்.

நெல் விதைப்பு

இதை தொடர்ந்து ஆகஸ்டு முதல் வாரத்தில் எங்களது நிலத்தில் நேரடி நெல் விதைப்பு செய்து சம்பா சாகுபடி பணியை நாங்கள் தொடங்குவோம். எனினும் குமராட்சி பகுதியில் உள்ள முக்கிய பாசன வாய்க்கால்கள் அனைத்தும் தற்போது தூர்ந்து போயுள்ளன. இதனால் வீராணம் ஏரியில் இருந்து திறக்கப்படும் தண்ணீர், பாசன வாய்க்கால் வழியாக கடை மடை பகுதிகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதை தவிர்க்க பொது பணித்துறை அதிகாரிகள் விரைந்து குமராட்சி பகுதியில் உள்ள பாசன வாய்க்கால்களை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்

**பரமத்தி வேலூரில் தேங்காய் பருப்பு விலை வீழ்ச்சி**




பரமத்தி வேலூரில் தேங்காய் பருப்பு விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். தேங்காய் பருப்புநாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவில் வேலூர், பரமத்தி, வசந்தபுரம், பாலப்பட்டி, செங்கப்பள்ளி, கரசப்பாளையம், கபிலர்மலை, ஜேடர்பாளையம் மற்றும் கரூர் மாவட்டம் நொய்யல், சேமங்கி, வேலாயுதம் பாளை யம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவில் தென்னை மரங்களை வளர்த்து வருகின்றனர்.இந்த பகுதியில் இருந்து, பரமத்தி வேலூர் அருகே பொத்தனூர் வெங்கமேட்டில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை தோறும் நடைபெறும் தேங்காய் பருப்பு ஏல சந்தைக்கு விவசாயிகள் தேங்காய் பருப்புகளை அதி களவில் கொண்டு வருகிறார் கள். இவ்வாறு கொண்டு வரப்படும் தேங்காய் பருப்புகள் ஒழுங்குமுறை விற் பனைக்கூட கண்காணிப் பாளர் முன்னிலையில் மறைமுக ஏலம் விடப்படுகிறது. இந்த ஏலம் முடிந்ததும் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப் பட்டு விடுகிறது.விலை வீழ்ச்சிசென்ற வாரம் இந்த விற்பனை கூடத்தில் நடை பெற்ற மறைமுக ஏலத்தில் 1,304 கிலோ தேங்காய் பருப்பு கள் ஏலத்திற்கு வந்திருந்தது. இதில் அதிகபட் சமாக கிலோ ஒன்று ரூ.76.89- க்கும், சரா

சரியாக ரூ.75.39- க்கும், குறைந்தபட்சமாக ரூ.73.89-க் கும் ஏலம் போனது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஏலத் திற்கு 1,053 கிலோ தேங்காய் பருப்புகள் விற்ப னைக்கு வந்திருந்தது. இதில் கிலோ ஒன்று அதிகபட்சமாக ரூ.63.05-க்கும், சராசரியாக ரூ.60.60-க்கும், குறைந்த பட்சமாக ரூ.58.15-க் கும் ஏலம் போனது. தேங்காய் பருப்பின் வரத்து கடந்த வாரத்தைவிட இந்த வாரம் சற்று குறைந்து உள்ளது என்றும், இதேபோல தேங்காய் பருப்பின் விலையும் இந்த வாரம் வீழ்ச்சி அடைந்து உள்ளது என்றும் விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

**கோழிகளில் அயற்சி ஏற்பட்டு முட்டை உற்பத்தி குறைய வாய்ப்பு ஆராய்ச்சி நிலையம் தகவல்**



நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளி யிடப்பட்டு உள்ள அறிக் கையில் கூறியிருப்பதாவது:- அடுத்த 4 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று மட்டும் 1 மில்லி மீட்டர் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. மற்ற நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்றின் வேகம் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு முறையே 9, 9, 9, 9 கி.மீ. வேகத்தில் தென் மேற்கு திசையில் இருந்து வீசும்.

வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட் சமாக 100.4 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 80.6 டிகிரி யாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட் சமாக 75, 74, 73, 72 சதவீத மாகவும், குறைந்தபட்சமாக 43, 42, 40, 39 சதவீதமாகவும் இருக்கும். வரும் 4 நாட்களுக்கு கோடையை போன்றே வானிலை நிலவும் வாய்ப்பு உள்ளது. பகல் வெப்பம் 100.4 டிகிரியை தொட்டும், இரவு வெப்பமும் 80.6 டிகிரியை அடைந்தும் காணப்படும் என்பதால் கோழிகளில் தீவன எடுப்பு குறைந்து, அயற்சி ஏற்படும். இதனால் முட்டை உற்பத்தி குறையும் வாய்ப்பு உள்ளது. செயற்கை முறை குளிர்விப்பானின் பயன்பாடு தேவைப்படலாம். குடிநீர்க் குழாய்களில் தண்ணீர் சூடா காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தண்ணீர் சூடாகும் போது கோழிகளில் தண்ணீர் குடிப்பது குறைந்து, தீவன எடுப்பும் குறைந்து விடும். இதன் மேலாண்மையில் பண் ணையாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த வாரம் கோழியின நோய் ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் மேல் மூச்சுக்குழாய் நோய்களினால் பாதிக்கப்பட்டு இறந்து இருப்பது தெரியவந்து உள்ளது. எனவே பண்ணை யாளர்கள் கால்நடை மருத்து வரின் ஆலோசனையின்படி வெப்ப அயற்சியை தடுக்கும் முறைகளையும், தகுந்த உயிர் பாதுகாப்பு முறைகளையும் பின்பற்றுமாறு அறி வுறுத்தப் படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.